### செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்களுடன் அரசுப் பள்ளிகளை மேம்படுத்த

# சன் டிவி ரூ.3.43 கோடி நிதியுதவி!

## திருமதி மல்லிகா மாறன் – காவேரி கலாநிதி மாறன் வழங்கினர்!

**சென்னை, ஆக.9-**

**அரசுப் பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்களுடன் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சன் டி.வி. 3 கோடியே 43 லட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவ சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது.**



அதன் ஒரு பகுதியாக, ராமநாதபுரம் மாவட்டத்தில் சமூகப் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் படிக்கும் மூன்று அரசுப் பள்ளிகளை செயற்கை நுண்ணறிவு வசதிகளுடன் கூடிய மாதிரிப் பள்ளிகளாக மேம்படுத்துவதற்காக சன் டி.வி. 3 கோடியே 42 லட்சத்து 56 ஆயிரத்து 79 ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதற்கான காசோலையை, க்ரை அமைப்பின் தலைமை நிர்வாக அலுவலர் பூஜா மர்வாஹாவிடம் சன் டி.வி. சார்பில் மல்லிகா மாறன், காவேரி கலாநிதி மாறன் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வின்போது க்ரை அமைப்பின் தென்னிந்திய மண்டல இயக்குநர் ஜான் ராபர்ட், தகவல் தொடர்புத்துறை தலைவர் வத்சலா மம்கெய்ன், இணைப் பொது மேலாளர் ஹாரி ஜெயகரன், இணைப் பொது மேலாளர் முகமது யாசீன் ஆகியோர் உடனிருந்தனர். இந்த நிதியின் மூலம், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம், திருப்புல்லாணி மற்றும் கடலாடி அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி STEM மையங்கள் மற்றும் ஏ.ஐ. ஆய்வகங்கள் அமைக்கப்படும் என்றும்,

இந்த பள்ளிகளில் வளமான நூலகம், சுகாதார வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தி, மாதிரி பள்ளிகளாக மாற்றப்படும் என்றும் க்ரை அமைப்பின் நிர்வாகிகள் தெரிவித்தனர். சமூகத்தில் பின்தங்கிய மாணவர்கள் படிக்கும் பள்ளிகளை மேம்படுத்தும் வகையில், க்ரை தொண்டு நிறுவனத்துக்கு இதுவரை 24 கோடியே 58 லட்சம் ரூபாய் நிதி உதவியை சன் டி.வி. வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### தொகுதி மறுவரையறையை எதிர்த்து

# இந்தியாவிலேயே முதன் முதலில் குரல் கொடுத்தவர் எங்கள் தலைவர்தான்!

## சட்டப்பேரவையில் - உதயநிதி ஸ்டாலின் ஆணித்தரமான விளக்கம்!



“தொகுதி மறுவரையறை பிரச்சினை குறித்து இந்தியாவிலேயே முதலில் பேசியது தி.மு.க. தான், எங்களுடைய தலைவர்தான். சென்ற ஆண்டு தென்மாநிலங்களைச் சேர்ந்த அனைத்து முதலமைச்சர்களையும் சென்னைக்கு வரவழைத்து மிகப் பெரிய ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். 5 மாநிலங்களின் முதலமைச்சர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

தொகுதி மறுவரையறையை எதிர்த்து இந்தியாவிலேயே முதல் முதலாக எங்களுடைய தலைவர்தான் குரல் கொடுத்தார். இந்த விவகாரத்தில் அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தை கூட்டுகிறீர்கள். இதற்கு சரியான முடிவை எங்களுடைய தலைவர் அவர்கள் ஆலோசனை செய்து எடுப்பார்கள்.”

**- உதயநிதி ஸ்டாலின்**
**(சட்டப்பேரவை நிகழ்ச்சி 7.8.2026)**

### முதல்வர் மாறியதும் முதலீடும் மாறியது!

# 17-வது இடத்துக்கு தள்ளப்பட்ட தமிழ்நாடு!

## புள்ளி விவரத்தால் அம்பலமாகும் அதிர்ச்சித் தகவல்!

**சென்னை, ஆக.9-**

**உள்கட்டமைப்பு, வணிகச் சூழல், வளங்கள், நிதி நிலைத்தன்மை என முதலீடுகளை ஈர்க்கும் அனைத்து அம்சங்களிலும் தமிழ்நாட்டின் தரத்தையும் சூழலையும் தேசிய சராசரிக்கும் மேல் உயர்த்தி விட்டுச் சென்றிருக்கிறது மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு. முதலீடுகளை ஈர்ப்பதற்கான களமாக தமிழ்நாட்டை மாற்ற மேற்கொண்ட 5 ஆண்டு கால அயராத முயற்சியால்தான் உள்கட்டமைப்பில் நம்பர் ஒன் மாநிலம் என்ற அந்தஸ்து கிடைத்திருக்கிறது.**

மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் கடந்த நிதியாண்டின் 4ம் காலாண்டில், அதாவது, முந்தைய காலாண்டில் 58 தனியார் திட்டங்கள் உட்பட மொத்தம் 183 திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்படி ரூ.44,036.71 கோடி அளவுக்கு முதலீடு ஈர்க்கப்பட்டிருக்கிறது என ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. அடுத்ததாக முதல்வர் விஜய் தலைமையில் த.வெ.க. அரசு பொறுப்பேற்றது. இந்த அரசின் முதல் காலாண்டில் 62 தனியார் திட்டங்கள் உட்பட மொத்தம் 121 திட்டங்கள் மூலம் ரூ.11,236.73 கோடி அளவிலான திட்டங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன.

அதாவது, தனியார் முதலீட்டில் 77.63 சதவீதமும், ஒட்டுமொத்த அளவில் முந்தைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 74.48 சதவீதமும் குறைந்திருக்கிறது. இதன் காரணமாக, முதலீட்டை ஈர்ப்பதில் கடந்த காலாண்டில் 6வது இடத்தை பிடித்திருந்த தமிழ்நாடு, தற்போதைய ஆட்சியில் 17வது இடம் பெற்று பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது என்கின்றனர் நிபுணர்கள். ஆனால், இதேபோன்று கேரளம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கேரள முதல்வராக வி.டி.சதீஷன், மேற்கு வங்க முதல்வராக சுவேந்து அதிகாரி பொறுப்பேற்றனர்.

கர்நாடகாவில் புதிய முதல்வராக டி.கே.சிவகுமார் பொறுப்பேற்றார். ஆனாலும், புதிய தலைமையின் கீழ் அந்த மாநிலங்கள் வளர்ச்சிப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு உட்பட இந்த 4 மாநிலங்களிலும் ஏப்ரல் ஜூன் காலாண்டில் தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம் ஆகியவற்றில் தேர்தலை தொடர்ந்து ஆட்சி மாற்றம் நடந்தது.



கர்நாடகாவில் சித்தராமையா கடந்த ஜூன் 3ம் தேதி முதல்வர் பதவியில் இருந்து விலகியதும், புதிய முதல்வராக டி.கே.சிவக்குமார் பொறுப்பேற்றார். ஆக, புதிய முதல்வரின் கீழ் நிர்வாகம் முற்றிலும் மாறி விட்டது. 4 மாநிலங்களிலும் புதிய முதல்வர்களின் தலைமையின் கீழ் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டதைத் தான் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த மாநிலங்களில், முந்தைய காலாண்டை விட அதிக வளர்ச்சியை பெற்றது கேரளம் தான்.

இங்கு வி.டி.சதீஷன் தலைமையில் புதிய அரசு அமைந்ததும் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பணிகள் விறுவிறுப்பாக மேற்கொள்ளப்பட்டன. இதன் பலனாக 16 தனியார் திட்டங்கள் மூலம் ரூ.2,363.38 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டது. இது முந்தைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 1,139.12 சதவீதம் உயர்வாகும். இத்துடன் சேர்த்து மொத்தம் 63 திட்டங்களில் ரூ.12,032.8 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. இது முந்தைய காலாண்டை விட 294.94 சதவீதம் அதிகம்.

இதற்கு முந்தைய காலாண்டில் பினராயி விஜயன் தலைமையிலான அரசில் 21 தனியார் திட்டங்கள் மூலம் ரூ.190.73 கோடியும், மொத்தம் 83 திட்டங்கள் மூலம் ரூ.3,046.77 கோடி முதலீடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் மூலம் இந்த மாநிலம் 20வது இடத்தில் இருந்து 16 இடத்துக்கு முன்னேறியுள்ளது. கர்நாடகாவில், டி.கே.சிவக்குமார் முதல்வராகப் பதவியேற்ற பிறகு புதிய முதலீடுகள் 232.53 சதவீதம் அதிகரித்து ரூ.83,326.36 கோடியாக உள்ளது. மொத்தம் 400 திட்டங்களில் இந்த முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முந்தைய காலாண்டில் சித்தராமையா தலைமையிலான ஆட்சியில் மொத்தம் 319 திட்டங்களில் ரூ.25,058.64 கோடி முதலீடு செய்யப்பட்டிருந்தது. முதலீடு அதிகரிப்பால் இந்த மாநிலம் கடந்த காலாண்டுடன் ஒப்பிடுகையில் 9வது இடத்தில் இருந்து 3வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அதாவது மொத்த முதலீடு 232.53 சதவீதம் உயர்ந்துள்ளது. இதேபோல், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி ஆட்சியில் கடந்த காலாண்டில் மொத்தம் 102 திட்டங்களில் 11,350.3 கோடி முதலீடு பெறப்பட்டுள்ளது. இதில், ரூ.6,447.54 கோடியிலான 27 திட்டங்கள் தனியார் முதலீடு.

அடுத்ததாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டு சுவேந்து அதிகாரி முதல்வராகப் பதவியேற்றார். இதில் மொத்தம் 72 திட்டங்களில் 34,003.65 கோடி முதலீடு பெறப்பட்டுள்ளது. இதில் ரூ.33,090.4 கோடி மதிப்பிலான 25 திட்டங்கள் தனியார் முதலீடு. முந்தைய மம்தா தலைமையிலான ஆட்சியில் கடந்த நிதியாண்டின் 4ம் காலாண்டில் பெறப்பட்டதை விட மொத்த முதலீடு 199.58 சதவீதம் அதிகரித்துள்ளது. தனியார் முதலீடு 416.23 சதவீதம் உயர்ந்துள்ளது.

மேற்கண்ட 4 மாநிலங்களில், புதிய முதல்வர் தலைமையில் பின்தங்கிப்போனது தமிழ்நாடு தான் என்பதை மேற்கண்ட ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. தமிழ்நாட்டில் தனியார் முதலீடு முந்தைய மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் கடந்த காலாண்டில் பெறப்பட்ட முதலீட்டுடன் ஒப்பிடுகையில் தனியார் முதலீடு 77.63 சதவீதமும், மொத்த முதலீடு 74.48 சதவீதமும் குறைந்ததால், 6 வது இடத்தில் இருந்து 17வது இடத்துக்கு தமிழ்நாடு தள்ளப்பட்டுள்ளது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

* மேற்கு வங்கம் கர்நாடகத்தில் ஈர்க்கப்பட்ட பெரிய முதலீடுகள்

தனியார் அமைப்பு வெளியிட்ட மேற்கண்ட காலாண்டு அளவிலான புள்ளிவிவர ஒப்பீட்டு ஆய்வறிக்கையின்படி, விக்ரம் சோலார் நிறுவனத்தின் சோலார் தகடுகள் தயாரிப்புக்கான ரூ..27,000 கோடி முதலீடு மீண்டும் மேற்கு வங்கத்திற்குள் வந்துள்ளது, முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது.

இது இந்த மாநிலத்தின் காலாண்டு முதலீட்டில் பெரும்பகுதியாக உள்ளது. இதுபோல், கர்நாடகா மாநிலத்தில் ரூ.16,500 கோடி மதிப்பிலான பம்ப் ஸ்டோரேஜ் திட்டம், மற்றும் ஜிண்டால் அலுமினியம் நிறுவனத்தின் ரூ. 6,000 கோடி முதலீடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதுபோல், ஹெப்பால் தொடங்கி சென்ட்ரல் சில்க் போர்டு வரை சுரங்கப்பாதை திட்டத்தை ரூ.1,300 கோடியில் செயல்படுத்தும் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**நன்றி**
**தினகரன்**
**8.8.2026**

### பா.ஜ.க.விற்குத் துணைபோகும் த.வெ.க., தொகுதி மறுவரையறைக்காக

# எம்.பி. க்கள் கூட்டத்தைக் கூட்டுவது கபட நாடகம்!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை, ஆக.9

முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது :–

தமிழக சட்டமன்றத் தேர்தல் நடந்த போது நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டி கொல்லைப்புறமாக தொகுதி மறுவரையறை மசோதாவை நிறைவேற்ற பா.ஜ.க.முனைந்த போது 5 மாநில முதலமைச்சர்கள் மற்றும் தேசிய மாநில அளவிலான எதிர்க்கட்சியினரை ஒன்றிணைத்து அந்த மசோதாவை வீழ்த்தி பிரதமர் மோடிக்கு தோல்வியை பரிசாக கொடுத்த தமிழக உரிமையை காத்தவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.



அந்த நேரத்தில் தனது எஜமான் பா.ஜ.க.வுக்கு பயந்து ஒதுங்கி ஒளிந்து தொகுதி மறுவரையறை குறித்து எந்த கருத்தும் சொல்லாத விஜய் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டுவதாக அறிவித்திருப்பது சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது.நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எந்த பிரதிநிதித்துவமும் இல்லாத த.வெ.க.கட்சிக்கு,ஒரு எம்.பி.க்குரிய வாய்ப்பு வந்தபோது காங்கிரஸில் இருந்து கொண்டு தி.மு.க.வுக்கு துரோகம் செய்தவருக்கு அதை வழங்கிவிட்டு தானோ தன் கட்சி உறுப்பினர்களோ பாராளுமன்றம் சென்று பா.ஜ.க.வை சந்திக்க திராணியில்லாத உங்கள் வீரம் தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியாதா? CMSIR?

காவிரி பிரச்சினை,தமிழ்த்தாய் வாழ்த்து, 100 நாள் வேலைத்திட்டம,FCRA, இந்திசமஸ்கிருதத்திற்கு ஆதரவு ஆகிய பிரச்சினைகளில் பா.ஜ.க.விற்கு துணை போகும் நீங்கள்.தற்போது உங்கள் ஆட்சியை தக்க வைத்து வரும் காங்கிரஸ்க்கு துணைசெல்ல எம்.பி.க்கள் கூட்டம் என்ற உங்கள் கபட நாடகம் தமிழ்நாட்டுக்கு தெரியாதா? CMSIR?

சிங்கம் போல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் தமிழக உரிமையையும்,தமிழக மக்களையும் எவ்வாறு பாதுகாத்தாரோ அதுபோல் தொகுதி மறுவரையறையிலும் முடிவெடுப்பார்.

தற்போது தமிழ்நாட்டின் நடக்கும் ஆட்சியைப் பார்த்தால் எனக்கு ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது ராஜா வேஷம் போட்டாலும் கோமாளி, கோமாளி தான்.

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியுள்ளார்.

### தமிழ்நாட்டில் ‘மிஷன் சக்தி’ திட்டத்தின்கீழ் செயல்படும்

# திட்ட சேவைகளின் தற்போதைய நிலை என்ன !

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 8 -*

*கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் மக்களவையில் எழுப்பிய கேள்வி வருமாறு:-*

*தமிழ்நாட்டில் மிஷன் சக்தி திட்டத்தின் சம்பல் மற்றும் சமர்த்யா கூறுகளின் கீழ் செயல்படும் திட்ட சேவைகள் உட்பட, அத்திட்டத்தை செயல்படுத்துவதன் தற்போதைய நிலை என்ன?*

*கடந்த 5 ஆண்டுகளில், குறிப்பிட்ட மாநிலத்தில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகளின் விவரங்கள் என்ன?*



*கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி உட்பட, மாவட்ட வாரியாக, இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த மையங்கள், மகளிர் உதவித் தொலைபேசி சேவைகள் மற்றும் பிற மகளிர் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் உதவி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?*

*குறிப்பாக மாநிலத்தின் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில், பயிற்சி பெற்ற பணியாளர் உள்கட்டமைப்பு வசதிகள், இடைவெளிகள் மற்றும் பெண்களிடையே விழிப்புணர்வு உள்ளிட்ட, இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் சவால்களுக்கு ஒன்றிய அரசு உதவியுள்ளதா ?*

*குறிப்பிட்ட மாநிலத்தில் இத்திட்டத்தின் மூலம் பெண்களுக்குப் பாதுகாப்பு, மறுவாழ்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளைப் பெறுவதை மேம்படுத்துவதற்காக ஒன்றியஅரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன?*

*இவ்வாறு தே.மலையரசன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.*